1993 அக்டோபர் 27]

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 40, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு கதர் துறை அமைச்சர்.

40—

மல்லசமுத்திரம் ஒன்றியத்தில் பனைப் பொருட்கள் கிராம தொழிலகம் அமைத்தல்.

*20053—டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதியில் மல்லசமுத்திரம் ஒன்றியம் பனைப் பொருட்கள் கிராமத் தொழிலகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாவுக்கு விடை கொடுக்கும் முன்பு புசிப்போர் குறை தீர்க்க, பசிப்போர் செய்து பார் போற்றும் தலைவி என்று பெயரெடுத்த தமிழக முதல்வர், இதயதெய்வம், தெய்வத்தாய், டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்கு எனது நன்றியையும், நன்றி கலந்த வணக்கத்தையும் அவர்களின் மலர்ப் பாதங்களுக்குச் சமர்ப்பித்து வினாவிற்கு விடை கொடுக்க விரும்புகிறேன்.

(அ) இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 5 கோடி பனை மரங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள தமிழகத்தில், தொழிலாளர் வர்க்கத்தின் துருவ நட்சத்திரமாகப் பனையேறும் தொழிலாளர்களின் இல்லமெல்லாம் அவர்கள் உள்ளமெலாம் நீக்கமற நிறைந்திருக்கும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் என்னுடைய தொகுதியில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பனைமரத் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில், பனைப் பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தேவைகளையும், நிதி உதவிகளையும் உடனுக்குடன் கிடைக்கச் செய்யும் வகையில் எனது கோரிக்கையினை பரிவுடன் மறுபரிசீலனை செய்ய முடியுமா எனக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரி தொகுதியில் மல்லசமுத்திரத்தினை உள்ளடக்கிய சேலம் மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவு

[1993 அக்டோபர் 27

சம்மேளனம் ஒன்று சேலம் நகரத்திலே திறம்படச் செயல்பட்டு வருகிறது. இந்தச் சம்மேளனமாவது அந்தப் பகுதியில் உள்ள பனைப் பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தேவைகளையும், நிதி உதவிகளையும் உடனுக்குடன் நிவர்த்தி செய்து வருகின்றது. சங்ககிரி தொகுதி மல்லசமுத்திரம் ஒன்றியத்தில் பனைபொருள் கிராமத் தொழிலகம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனை மரத்திற்காகவே ஒரு வாரியத்தை அமைத்து பனைமரத் தொழிலாளர்களுடைய வாழ்க்கையில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் என்னுடைய தொகுதியில் மோட்டுப்பள்ளி கிராமம் பொன்மேட்டில் தேசிய பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனத்தின் சார்பாக இருபது ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு பதினைந்து ஆண்டுகளாகியும் அங்கே பொருட்கள் இன்னமும் உற்பத்தி செய்யப்படாமல், கட்டப்பட்ட இரண்டு கூட்டுறவுச் சங்கக் கட்டிடங்களும் செயல்படாமல் இருக்கின்றன. அந்தக் கட்டிடத்தில், பனைமர வாரியம் அமைக்கும்போது அந்த இடத்தைப் பயன்படுத்தி, தற்போது சேலம் நகரில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வரும் அந்த சேலம் மாவட்ட பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனம் என் தொகுதியில் இயங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரியில் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத்திற்கு என்று சொந்தமானக் கட்டிடம் ஒன்று ஏற்கெனவே கட்டப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு முழுவதிலும் பனைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பனைத் தொழிலாளர்கள் நலன் கருதியும், அவர்களின் வாழ்விலே ஒளியூட்டக் கூடிய அந்தப் பனைத் தொழிலை அபிவிருத்தி செய்யும் பொருட்டும், நமது மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம், தெய்வத் தாய், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய சிந்தனையாலும், அரிய முயற்சியாலும், மிக விரைவிலே அமைய இருக்கும் தமிழ்நாடு பனைப் பொருள் அபிவிருத்தி வாரியத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதிலும் பனைத் தொழில் பல்வேறு நிலைகளிலும் பல்வேறு அமைப்புகளிலும் விரிவாக்கம் செய்யப்பட்டு செயல்படுத்த வாய்ப்பு உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.